**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 85/2012** **Date:09.04.2026.**

**(PW1)- கணேசன்**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். என் குடும்பத்திற்கும் பிரதிவாதி குடும்பத்திற்கும் விரோதம் உண்டு என்றால் சிறிய அளவில் விரோதம் உண்டு. பிரதிவாதியின் வீட்டில் உள்ள மரத்தின் கீளை எனது சொத்திற்குள் வந்ததால் நான் இந்நீதிமன்றத்தில் அ.வ.எண். 81/2012 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் பிரதிவாதி பலமுறை கூறியும் கேட்காததால் தாக்கல் செய்தேன். அதில் நான் பிரதிவாதியை மட்டும் தரப்பினராக சேர்க்காமல் அவருடைய தாயார், சகோதரிகளை தரப்பினராக சேர்த்திருந்தேன் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் எனக்கு சாதகமாக தீர்ப்பு கிடைத்து மரங்கள் அகற்றப்பட்டது என்றால் சரிதான்.

2. தற்போது தாக்கல் செய்துள்ள வழக்கு எனது சகோதரர் செல்லப்பன் என்பவர் பேட்ரிக்சூலியன் என்பவருக்கும் விஜயகுமாருக்கு கிரயம் கொடுத்த செல்லப்பனின் சொத்தின் தென்கிழக்கு மூலையில் உள்ள ஒரு செண்ட் சொத்து சம்பந்தமாக தாக்கல் செய்துள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்து சம்பந்தமான கிரய ஆவணத்தை நான் வா.சா.ஆ. 3 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் படி வழக்கு பிரதிவாதிக்கும் சொத்தை கிரயம் கொடுத்த செல்லப்பன் மற்றும் அவரது பின் வாரிசுகளுக்கு பாதை போக்குவர உரிமை உள்ளது என்றால் சரிதான்.

3. மேற்படி ஆவணத்தில் எல்கையாக அம்மன் கோவிலுக்கும் மேற்கு, எனது சகோதரர் ராஜேந்திரன் வகை மனைக்கு வடக்கு, தனது கிடப்பு இடத்திற்கும் கிழக்கும் தெற்குமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் மேற்படி சொத்து பாதை வகைக்காக கிரயம் கொடுக்கப்பட்டுள்ளதாக துலங்குகிறது என்றால் சரிதான். மேற்படி பாதை கனரக வாகனங்கள் செல்லலாம் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் அவ்வாறு சொல்லிதான் கிரயம் பெற்றனர். நான் கூறுவது போல் கனரக வாகனம் செல்லலாம் என்று சொல்லி கிரயம் பெற்றிருந்தால் அதை மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டு இருப்பார்கள் என்றால் ஆவணத்தில் எழுதவில்லை.

4. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.3 கிரயத்திற்கு பின்பு நான் எனது சகோதரர் ராஜேந்திரன் என்பவரிடம் இருந்து 640 சதுர லிங்ஸ் சொத்து எனது பாகத்திற்கு கிடைத்த 3 வது கண்ட சொத்திற்கு பாதைக்காக

வேண்டி கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி கிரய ஆவணத்தை வா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பாதையின் அகலம் எவ்வளவு என்றால் 4 லிங்ஸ் ஆகும். மேற்படி 4 லிங்ஸ் பாதை ராஜேந்திரன் சொத்தின் கிழக்கு அத்ததில் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி 4 லிங்ஸ் பாதைக்கு வடக்கு பக்கம் செல்லப்பன் எழுதிக்கொடுத்த ஒரு செண்ட் மனையும் தெற்கு பக்கம் எனது சொத்தான 3 வது கண்டத்தில் சேரும் என்றால் சரிதான்.

5. செல்லப்பன் கிரயம் கொடுத்த ஒரு செண்ட் நிலம் மேற்படி 4 லிங்ஸ் அகல பாதையிலும் மீதமுள்ள இடம் ராஜேந்திரன் சொத்திலும் சேரும் என்றால் சரிதான். மேற்படி ஒரு செண்ட் நிலத்தை பாதைக்காக பேட்ரிக் சூலியன் மற்றும் ராஜேந்திரன் பயன்படுத்தினார்கள் என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.4 ஆவணத்தை கிரயம் பெற்ற அதே தேதியில் பேட்ரிக் சூலியனும், விஜயகுமாரும் ராஜேந்திரனிடம் இருந்து 75 செண்ட் 110 சதுர லிங்ஸ் சொத்தை கிரயம் பெற்றனர் என்றால் சரிதான். மேற்படி 75 செண்ட் 110 சதுர லிங்ஸ் சொத்தை தான் ஏ பட்டிகையாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பேட்ரிக்சூலியன் விஜயகுமாரும் ராஜேந்திரனிடம் இருந்து 75 செண்ட் 110 சதுர லிங்ஸ் சொத்தை கிரயம் பெற்ற கிரய ஆவணம் வா.சா.ஆ.5 ஆகும்.

6. மேற்படி வா.சா.ஆ.5 ஆவணத்தில் ஒரு வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வரைபடத்தில் நான் கிரயம் பெற்றுள்ள 640 லிங்ஸ் சொத்து காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். செல்லப்பன் பாதைக்கு கொடுத்த ஒரு செண்ட் நிலம் தென்வடல் நீளமாகவும் கிழமேல் நீளம் குறைவாகவும் உள்ள இடம் என்றால் சரியல்ல, வளைவாக உள்ளது. வா.சா.ஆ. 3 ஆவணத்தில் நான் குறிப்பிடும் விதத்தில் பாதை குறிப்பிடப்படவில்லையென்றால் சரிதான். சர்வே எண் 454/4 ல் 2 செண்டும் 975 சதுர லிங்ஸ், 454/5 ல் 1 செண்ட் 400 சதுர லிங்ஸ் சொத்தும் நான் பேட்ரிக்சூலியனும் மற்றும் விஜயகுமாருக்கும் வா.சா.ஆ.6 ஆவணம் மூலம் கிரயம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரயத்தை வாலிபர் சங்கதின் தலைவர் என்ற முறையில் கிரயம் கொடுத்தேன் என்றால் சரிதான்.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**